தொல்காப்பிய விழா - 2025

மாணவர்களுக்கான தமிழ்த்திறன் போட்டிகள்

**பேச்சுப் போட்டி: வகுப்பு - இளமழலை (JK) (2019-இற்குப் பின் பிறந்தோர்)**

# என் குடும்பம்

என் குடும்பம் ஓர் அழகான, அன்பான குடும்பம்.

என் குடும்பத்தில் நானும், அப்பாவும், அம்மாவும், என் உடன் பிறந்தோரும் இருக்கிறோம்.

அம்மாவும் அப்பாவும் எம்மிடம் மிக்க அன்புள்ளவர்கள். அவர்கள் எம்மீது மிகுந்த அக்கறை கொண்டவர்கள். அன்பு, பண்பு, பாசம் மிக்கவர்கள்.

எம் பெற்றோரே நாம் கண்ட முதற் கடவுள். இதனையே ஔவைப் பாட்டியும் “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்றார்.

அம்மா, அப்பாவின் பெற்றோரை நாங்கள் தாத்தா, பாட்டி என அழைப்போம். அவர்கள் எமக்குக் கதைகள் சொல்வார்கள்.

என் குடும்பத்தில் மாமா, மாமி, சித்தி, சித்தப்பா, பெரியம்மா, பெரியப்பா ஆகியோர் உள்ளனர். அவர்கள் என் அம்மா, அப்பாவின் உடன் பிறந்தவர்கள்.

நாம் பண்டிகை நாட்களில் உறவினர் வீடுகளுக்குச் செல்வோம்.

நாம் தமிழர்கள். நான் வீட்டில் தமிழில்தான் கதைக்கிறேன்.

நாம் எல்லோரும் தமிழைக் கற்போம். தமிழராய் வாழ்வோம். தமிழராய் எங்கள் அடையாளத்தைக் காப்போம்!

வாழ்க தமிழ்!

நன்றி. வணக்கம்!